ICRC

***செய்திக் குறிப்பு 001/2020***

3 ஏப்ரல் 2020

**இலங்கை: கொவிட்-19 தொற்றில் தடுத்து வைக்கப்பட்டவர்களையும், பொதுச் சுகாதாரத்தையும் பாதுகாக்க அதிகாரிகளுக்கு உதவுதல்**

கொழும்பு (ஐசிஆர்சி): கொவிட்-19 வியாபித்துள்ள பின்புலத்தில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் (ஐசிஆர்சி) இலங்கை பேராயமானது பொதுமக்களையும், தடுத்து வைக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கும் முயற்சிகளுக்கு தேசிய அதிகாரிகளுக்கு உதவுகிறது. சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன், நீதி அமைச்சு. சிறைச்சாலைகள் திணைக்களம், பொலிஸ் மா அதிபர், ஏனைய அதிகாரிகள் ஆகிய தரப்புக்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட விதந்துரைகளும் உள்ளடங்கிய பதிலளிப்புத் திட்டத்தை ஐசிஆர்சி பரிந்துரைத்துள்ளது.

“ஐசீஆர்சியின் உலக பதிலளிப்புத் திட்டத்திற்கும் அவசர கோரிக்கைகளுக்கும் பங்களிப்பு நல்கும் நாம், கொவிட்-19 தொடர்பாக அதிகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவி செய்வதற்கு ஏற்புடைய வகையில் எமது நிகழ்ச்சிகளை வடிவமைத்துள்ளோம். பொதுச் சுகாதாரம், தடயவியல், தடுப்புக்காவலில் சுகாதாரம், தொற்றுநீக்கம், கழிவு முகாமைத்துவம் ஆகிய துறைகளில் எமது தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கியுள்ளோம்” என்று தெரிவித்தார், இலங்கைக்கான ஐசீஆர்சி பேராயத்தின் தலைவர் லுக்காஸ் பெட்ரிடிஸ்.

இலங்கையில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு 1989ஆம் ஆண்டு தொடக்கம் ஐசிஆர்சி விஜயம் செய்து வருகிறது. அத்தகைய தடுப்புக் காவல்களில் ஆட்கள் நடத்தப்படும் விதத்திற்கும், அவற்றின் நிலைமைகளுக்கும் ஐசீஆர்சி அதிக முன்னுரிமை வழங்குகிறது. 24 சிறைச்சாலைகளுக்கும், ஐந்து பிரதான பொலிஸ் தடுப்பு நிலையங்களுக்கும் கடந்த மார்ச் 22ஆம் திகதி சுகாதாரப் பொருட்களையும் (குளோரின், சவர்க்காரம்), தனிநபர் பாதுகாப்புக் கருவிகளையும் ஐசீஆர்சி விநியோகிக்கத் தொடங்கியது. இந்த விநியோக நடைமுறையில் குறித்த பொருட்களின் பயன்பாடு பற்றியும், முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் உரிய அதிகாரிகளுடன் துணையுடன் விளங்கப்படுத்தல்களும் உள்ளடங்கியிருந்தது.

“சிறைச்சாலைகளுக்கும், தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கும் விநியோகிக்கத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக எமது குழுக்கள் நாள் முழுவதும் வேலை செய்கின்றன. இதுவரையில், நாடு முழுவதும் 20,000 இற்கு மேலான பயனாளிகளுக்கு நாம் உதவி செய்துள்ளோம். இருந்தபோதிலும், எமது முயற்சிகளில் இருந்து பின்வாங்கவோ, மந்தமடையவோ முடியாது என்பதை நாம் அறிவோம்,” என்று அவர் கூறினார். “துரிதமாக தீவிரம் பெற்று வரும் அச்சுறுத்தலுக்கு மத்தியில், தேவைகளையும், முன்னுரிமைகளையும் சிறப்பாக புரிந்து கொண்டு, எவ்வளவு சிறப்பாக நாம் அதிகாரிகளுக்கு பங்களிப்பு வழங்க முடியும் என்பதை மதிப்பிடுவதற்காக, அடுத்து வரும் வாரங்களில் தொடர்ந்தும் செயற்படுவோம்” என்றும் அவர் தெரிவித்தார்.

ஐசீஆர்சி ஆனது செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சர்வதேச சம்மேளனம் அடங்கலாக, பங்காளிகளுடன் தொடர்ந்தும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து வருகிறது. அது கொவிட்-19 பற்றிய சுகாதார விழிப்புணர்வுத் தகவல்கள் அடங்கலாக, உள்ளூர் மொழிகளில் தயாரிக்கப்பட்ட, சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், பொருள் உதவி வழங்கியும் தேசிய பங்காளியான இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியும் வருகிறது.

**மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்**

**சரஸி விஜேரட்ன, ICRC Colombo, தொ.பே.: +94 11 250 33 46 அல்லது + 94 773158844**

**அல்லது எமது இணையத்தளத்தை நாடுங்கள்: www.icrc.org**

**பிந்திய ICRC காணொளிகளை ஒளிபரப்புத் தரத்தில் முன்னோட்டம் காணவோ, தரவிறக்கம் செய்யவோ www.icrcvideonewsroom.org என்ற இணையத் தளத்திற்கு செல்லுங்கள்.**

**facebook.com/icrc மற்றும் twitter.com/icrc இல் ICRCஐத் தொடரலாம்.**